வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்

தேதி: 22.09.2025 நேரம்: மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

- நாட்டில், இன்று முதல் அமலாகும் புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், வீட்டுச் செலவுகள் குறைந்து, குறிப்பாக பெண்கள் மிகுந்த பயன் பெறுவார்கள் என்றும், பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, அருணாச்சல பிரதேசத்தில், 5 ஆயிரத்து 100 கோடி ரூபாய் மதிப்பில், பல்வேறு திட்டங்களை தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.
- அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், சுற்றுலா, விருந்தோம்பல் உள்ளிட்ட துறைகளிலும், முக்கிய பலன்கள் ஏற்பட உள்ளன.
- புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், இன்று காசநோயாளிகளுக்கு, சத்துணவு பெட்டகங்களை வழங்கினார்.

-----------------------

***மோடி அருணாச்சல்*** (17)

பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று அருணாச்சல பிரதேச மாநிலம் இட்டா நகரில், உள்ளூர் வியாபாரிகள், மற்றும், தொழில் அதிபர்களுடன் கலந்துரையாடினார். அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களின் அமலாக்கம் குறித்தும், ஜிஎஸ்டி சேமிப்பு திருவிழா குறித்தும், இவர்கள் மகிழ்ச்சி வெளியிட்டதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் தெரிவித்துள்ளார். விவசாயம், மீன்வளம், மற்றும், உள்ளூர் தொழில்களுக்கு, புதிய மாற்றங்களால் ஏற்படும் பயன்களையும் இவர்கள் பாராட்டியதாக, பிரதமர் தெரிவித்துள்ளார். முன்னதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி, மொத்தம் 5 ஆயிரத்து 100 கோடி ரூபாய் மதிப்பில்,

பிராந்தியத்தின் வளர்ச்சிக்கான பல்வேறு உள்கட்டமைப்புத் திட்டங்களை தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். வடகிழக்கு மாநிலங்களை, அஷ்ட லட்சுமியாகவே மத்திய அரசு கருதுவதால், வடகிழக்கு பிராந்தியம் வளர்ச்சியில் பின்தங்குவதை அரசு அனுமதிக்காது என்று அவர் குறிப்பிட்டார். நாட்டில் இன்று முதல் அமலாகும் புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், வீட்டு அளவிலான மாதாந்திர செலவுகள், கணிசமாக குறையும் என்றும், இதனால், குறிப்பாக பெண்கள் மிகுந்த பயன் பெறுவார்கள் என்றும், பிரதமர் தெரிவித்தார்.

-----------------------

<u>*மோடி-உஜ்வாலா* (9)</u>

நவராத்திரி விழாவின் முதல் நாளான இன்று, பிரதமரின் உஜ்வாலா திட்டத்தின் கீழ், புதிதாக 25 லட்சம் இலவச எரிவாயு இணைப்புகளை, தகுதி உள்ள வீடுகளுக்கு வழங்க, மத்திய அரசு முடிவு செய்துள்ளது. உஜ்வாலா குடும்பத்தில் சேரும் தாய்மார்கள், சகோதிரிகள் அனைவருக்கும வாழ்த்துக்கள் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் கூறியுள்ளார். அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம், புனிதமான நவராத்திரி பண்டிகையின் போது, புதிய மகிழ்ச்சி பிறப்பதுடன், மகளிர் அதிகாரப் பங்கேற்பை மேம்படுத்துவதற்கான, நாட்டின் உறுதிப்பாடும் வலுப்பெறும் என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

-----------------------

<u>*சேவா சப்தாஹ்-வீட்டு வசதி* -1 (8)</u>

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, மக்கள் சேவை-நல்லாட்சி என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், நாட்டில் மாற்றங்களையும் முன்னேற்றத்தையும் கொண்டு வர, அயராது உழைத்து வருகிறது. நாட்டு மக்களுக்கு, குறைந்த செலவில் வீட்டு வசதி வழங்கவும், நவீன நகர்ப்புற உள்கட்டமைப்பு வசதிகள் மூலம், மக்களின் அன்றாட வாழ்க்கையை எளிதாக்கவும், அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு

நடவடிக்கைகள் குறித்து, இன்று, சேவைத் திருவிழா என்னும், இந்த சிறப்பு தொடரில் காண்போம். ..........

(வாய்ஸ்)

*சேவா சப்தாஹ்- வீட்டு வசதி - 2 (8)*

(வாய்ஸ்)

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு கடந்த 11 ஆண்டுகளில் நாட்டில், முக்கிய மாற்றங்களுக்கான விதைகளை, வலுவா மன உறுதியுடன், தொடர்ச்சியாக விதைத்து வருகிறது. மக்களை மையமாக கொண்ட அரசின் பல்வேறு சீர்திருத்தங்களால், குறிப்பாக, இதுவரை கண்டுகொள்ளப் படாத பிரிவினர் உட்பட, அனைத்து மக்களின் வாழ்க்கை எளிதாகி உள்ளது. குறைந்த செலவில் மக்களுக்கு வீட்டு வசதி வழங்கும் திட்டங்களுக்கு, அரசின் இத்தகைய முயற்சிகளில், மிக முக்கிய இடம் அளிக்கப் பட்டுள்ளது. ...

(வாய்ஸ்-மோடி)

*சேவா சப்தாஹ்- வீட்டு வசதி*- 3 (12)

இத்தகைய தொலை நோக்குப் பார்வையுடன் அரசு, விரிவான 2 இயக்கங்களை உருவாக்கி உள்ளது. பிரதமரின் நகர்ப்புற வீட்டு வசதித் திட்டம், கிராமப்புற வீட்டு வசதித் திட்டம் ஆகிய இவ்விரு திட்டங்களும், தரமான வீட்டு வசதி, பலருக்கும் கிடைப்பதை உறுதிப்படுத்தி உள்ளன.

மத்திய அரசின் ஸ்மார்ட் நகரத் திட்டத்தினால், இந்திய நகரங்கள் தற்போது பிரகாசம் அடைந்துள்ளன. இத்திட்டத்தின் கீழ் இதுவரை, ஒன்றரை லட்சம் கோடி ரூபாய் மதிப்பில், 7 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட திட்டப் பணிகள் நிறைவேற்றி முடிக்கப் பட்டுள்ளன. 2 கட்டங்களாக நிறைவேற்றப்பட்ட அம்ருத் திட்டத்தினால், நாடு முழுவதும் கோடிக் கணக்கிலான மக்களுக்கு, தூய குடிநீர், மற்றும், கழிவுநீர் இணைப்புகள் கிடைத்துள்ளன. பசுமைப் பரப்பும், நீர்நிலைகளும் புனரமைக்கப்பட்டு,

கூடுதல் எரிசக்தித் திறனுடன் கூடிய எல்இடி விளக்குகள், தெருக்களில் நிறுவப் பட்டுள்ளன.

*சேவா சப்தாஹ்- வீட்டு வசதி*- 4 (7)

இதுஅல்லாது, உஜாலா திட்டத்தின் கீழ், பெரும் எண்ணிக்கையிலான வீடுகளுக்கு, எல்இடி பல்புகளும், உஜ்வாலா திட்டத்தின் கீழ் எரிவாயு இணைப்புகளும் வழங்கப் பட்டுள்ளன. ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ், நாடு முழுவதும் கிராமங்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப் படுகிறது. புதுச்சேரியில், மத்திய அரசின் ஜல் ஜீவன் திட்டத்தினால் பயன்பெற்ற, சின்ன வீராம்பட்டினம் பகுதியைச் சேர்ந்த விஜயகுமார் எமது செய்தியாளரிடம் பேசுகையில்....

(வாய்ஸ்-விஜயகுமார்)

*சேவா சப்தாஹ்- வீட்டு வசதி*- 5 (5)

நாட்டின் ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு தெருவிலும், கான்கிரீட் சாலைகள், எல்இடி விளக்குகள், குழாய் இணைப்புகள் என, நவீன வசதிகள் தொடர்ச்சியான முறையில் உருவாக்கப்படுவதால், கண்ணியமான வாழ்க்கையுடன் கூடிய எதிர்காலம் என்பது, வெறும் வாக்குறுதியாக அன்றி, நிஜ நிலவரமாகத் திகழ்வதை மறுப்பதற்கு இல்லை.

-----------------------

*ஜிஎஸ்டி-பல்துறை 1 (7)*

அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள், இன்று முதல் அமலுக்கு வந்துள்ளன. இதுவரை, 5, 12, 18, மற்றும், 28 சதவிகிதம் என, 4 அடுக்குகளாக இருந்த ஜிஎஸ்டி கட்டமைப்பு, 5, மற்றும், 18 சதவிகிதம் என 2 அடுக்குகளை மட்டுமே கொண்டதாக மாற்றி அமைக்கப் பட்டுள்ளது. பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரியை குறைத்து, மக்களுக்கு நேரடி நிவாரணம் வழங்கும் வகையில், இம்மாற்றங்கள் அமைந்துள்ளன. இதுகுறித்து ஒரு செய்தித் தொகுப்பு..... (வாய்ஸ்)

ஜிஎஸ்டி-பல்துறை 2 (14)

(வாய்ஸ்)

அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களின் கீழ், மத்திய அரசு பல்வேறு துறைகளுக்கு கணிசமான வரிக் குறைப்பு வழங்கி உள்ளது. சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறைக்கு மிகுந்த பயன் அளிக்கும் வகையில், நாள் ஒன்றுக்கு, 7 ஆயிரத்து 500 ரூபாய் வரையிலான ஹோட்டல் அறை வாடகை மீதான 12 சதவிகித ஜிஎஸ்டி, 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளது. இதனால், நடுத்தர குடும்பங்களின் பயணங்களுக்கான செலவு குறைவதுடன், ஹோட்டல் துறையில் முதலீடுகளும் அதிகரிக்கும்.

நாட்டின் கலை-கலாச்சாரத் துறைக்கும், புதிய வரி சீர்திருத்தங்களின் கீழ், மிகுந்த ஆதரவு அளிக்கப் பட்டுள்ளது. ஆபரண பொருட்கள், நவரத்தின வேலைப்பாடுகள், மற்றும், கல்லில் உருவம் பொறித்த கலைப் பொருட்கள் மீதான 12 சதவிகித ஜிஎஸ்டி, 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளது. இதனால், சிற்பிகள், மற்றும் கைவினைக் கலைஞர்களுக்கு நேரடிப் பலன் கிடைப்பதுடன், இந்தியாவின் வளமான கலாச்சார மரபுகளும் வலுப்பெறும்.

-----------------------

ஜிஎஸ்டி-பல்துறை 3 (6)

பெரும் எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு பயன் அளிக்கும் வகையில், நோட்டுப் புத்தகங்கள், மற்றும் பென்சில் உள்ளிட்ட எழுதுப் பொருட்கள் மீதான ஜிஎஸ்டி, பூஜ்ஜியம் சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளது. புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், நடுத்தரப் பிரிவினர் உட்பட அனைத்து மக்கள் மீதான வரிச் சுமைக் குறைந்து, செலவு போகக் கையில் எஞ்சி இருக்கும் பணம் அதிகரிக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

-----------------------

***கைலாஷ்நாதன்*** (17)

காசநோய் இல்லாத இந்தியாவை உருவாக்குவதற்கான தேசிய இயக்கத்தின் கீழ், வில்லியனூர் அரசு நெஞ்சக நோய் நிலையத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் கலந்து கொண்டு, காசநோய்க்கு சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு, நிக்க்ஷய் மித்ரா திட்டத்தின் கீழ், ஊட்டச்சத்து உணவு பெட்டகங்களை வழங்கினார். காசநோயில் இருந்து முற்றிலுமாக விடுபட, தொடர்ந்து சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தையும், மருத்துவ ஆலோசனையின் படி, பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார். காசநோயாளிகளுக்கு, ஊட்டச்சத்து உணவு பெட்டகங்கள் வழங்குவதற்கான நிக்க்ஷய் மித்ரா திட்டத்திற்கு, துணை நிலை ஆளுநர் நன்கொடை வழங்கினார்.

பின்னர் மாநில காசநோய் அதிகாரி டாக்டர் வெங்கடேஷ், எமது செய்தியாளரிடம் பேசுகையில், கடந்த 8 மாதங்களாக, புதுச்சேரி மாநிலம் முழுவதும், மருத்துவக் குழுவினர் வீடு விடாக சென்று, காச நோயாளிகளை கண்டறிந்து வருவதாக கூறினார். இவர்களுக்கு, இலவச மருந்து-மாத்திரைகளுடன், மாதம் 1000 ரூபாய் நிதி உதவி, வங்கிக் கணக்கில் செலுத்தப் படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

-----------------------

***கைலாஷ்நாதன்-யாகம்*** (5)

புதுச்சேரியில், தர்ம சம்ரக்க்ஷண சமிதி சார்பில், கிழக்கு கடற்கரை சாலை சங்கர வித்யாலயா மேல்நிலைப் பள்ளியில் இன்று நடைபெற்ற. உலக நன்மைக்கான மஹா சண்டி ஹோமத்தில், துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் கலந்து கொண்டு, ஹோமத்தை தொடக்கி வைத்தார். மாநிலங்களவை உறுப்பினர் திரு. செல்வகணபதி உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

-----------------------

<u>*புதுச்சேரி ஜெயகுமார்* (7)</u>

மத்திய அரசின் சேவா பக்வாடா-இருவார இயக்கத்தின் கீழ், புதுச்சேரியில், மேல்சாத்தாமங்கலம் கிராமத்தில், நாய்களுக்கு வெறிநாய்க் கடி தடுப்பூசி போடும் பணிகளை, மாநில கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. ஜெயக்குமார் இன்று தொடக்கி வைத்தார். நிகழ்ச்சியில், கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் டாக்டர் லதா மங்கேஷ்கர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்த இயக்கத்தின் கீழ், தொடர்ந்து ஒருவார காலத்திற்கு தடுப்பூசி போடப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

-----------------------

<u>*வானிலை* (15)</u>

இன்று வடகிழக்கு வங்கக் கடலில், குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி நிலவும் நிலையில், கிழக்கு மத்திய வங்கக் கடல், மற்றும், அதை ஒட்டிய வடக்கு வங்கக் கடல் பகுதியில், வரும் 25ஆம் தேதி வாக்கில், மேலும் ஒரு காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகும் என எதிர்பார்க்கப் படுகிறது. இன்றைய தினம், தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல், மிதமான மழை எதிர்பார்க்கப் படுகிறது. கோவை மாவட்டத்தின் மலை பகுதிகள், மற்றும், நீலகிரி, தேனி, திண்டுக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி, செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி பகுதியிலும், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 28ஆம் தேதி வரை, மழை நீடிக்கலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, விழுப்புரம் மாவட்ட நேமூர், திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டு ஆகிய இடங்களில் 11 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

புதுச்சேரியில், திருக்கனூரில் 6 செ.மீ, மற்றும், பெரிய காலாபட்டில் 2 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

-----------------------

<u>***மோடி-புத்தகம்*** (15)</u>

பல்வேறு சந்தர்ப்பங்களில் பிரதமர் ஆற்றிய உரையின் தொகுப்பாக, மத்திய அரசின் புத்தக வெளியீட்டுப் பிரிவினால் தயாரிக்கப் பட்டுள்ள, அனைவருக்கும் ஆதரவு-அனைவருக்கும் வளர்ச்சி எனும் நூலை, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், புதுடெல்லியில் இன்று வெளியிட்டார். இந்தியாவிலும், வெளிநாடுகளிலும், பலகோடி மக்களின் உணர்வூக்கமாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி திகழ்வதாக அவர் கூறினார். பிரதமர் திரு. நரேந்திர மோடி, சாதாரண மனிதனின் பிரதிநிதி என்ற நிலையில் இருந்து பலமடங்கு மேம்பட்டு, சாத்தியமில்லாத பல விஷயங்களை சாத்தியமாக்கிக் காட்டும், நிஜமான தலைவராக உருவெடுத்து இருப்பதாகவும், சுயநலமின்றி, மக்களுக்கு சேவை புரியும் மனமிருந்தால், எல்லாமே வெற்றிதான் என்பதை பிரதமர் திரு. நரேந்திர மோடி உலகிற்கு எடுத்துக் காட்டி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். மாநிலங்களை துணைத் தலைவர் திரு. ஹரிவன்ஷ், மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ், துறைச் செயலர் திரு. சஞ்சய் ஜாஜூ உள்ளிட்டவர்களும், விழாவில் கலந்து கொண்டனர்.

-----------------------